©
GOVERNMENT OF TAMIL NADU
2019

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

No. 18] CHENNAI, WEDNESDAY, MAY 1, 2019
Chithirai 18, Vikari, Thiruvalluvar Aandu–2050

Part II—Section 2

Notifications or Orders of interest to a section of the public issued by Secretariat Departments.

NOTIFICATIONS BY GOVERNMENT

CONTENTS

Pages.

HOME DEPARTMENT

Code of Criminal Procedure—Declaration of Certain Traffic Points Cease to form part of the Local Areas of the Police Stations in the Salem District 446

Pages.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

Labour Courts for Adjudication 446-447

தொழிற்தகராறுகள் சட்டம், 1947–சென்னை தொழிலாளர் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகளை காஞ்சிபுரம் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்வது–திருத்தம்

திருத்த அறிவிக்கை 447

Verified RealEstate™

NOTIFICATIONS BY GOVERNMENT

HOME DEPARTMENT

Declaration of Certain Traffic Points Cease to form part of the Local Areas of the Police Stations in the Salem District under the Code of Criminal Procedure.

[G.O. Ms. No.57, Home (Police.XIV), 24th January 2019.]

No.II(2)/HO/319/2019.—Under clause (s) of Section 2 of the Code of Criminal Procedure, 1973 (Central Act, 2 of 1974), the Governor of Tamil Nadu hereby declares that with effect on and from the 24th January, 2019 the areas specified in column 3 of the Schedule below shall cease to form part of the local area of he Police Station specified in column 2 and shall form part of the local area of the Police Station specified in column 4 thereof:-

THE SCHEDULE

District	*Police Station in which at presently attached*	*Local Areas/Mother Villages/Hamlets*	*Police Station to which hereafter to be attached*
(1)	*(2)*	*(3)*	*(4)*
Salem	Soora-mangalam (Salem City)	**Mother Villages** (1) Manguppai (2) Kottagoundampatti (3) Vellakkalpatti (4) Karuppur (5) Sangeethapatti (6) Kollapatti (7) Moongilpadi (8) Thekkampatti (9) Vellalapatti (10) Saminayakkanpatti (11) Thathayangarpatti (12) Kaminayakkanpatti (13) Anaigoundanpatti (14) Jagadevanpatti **Hamlets** (1) Umayanur (2) Venkayanur (3) Vethalaikaranur (4) Kullagoundanur (5) Arunthathiyar Street (6) Pachagoundampatti (7) Mettupatti (8) Kundur (9) Kuduvampatti (10) Kaligoundanur (11) Periyavellalapatti (12) Chinnavellalapatti (13) A.D.Street.	Karuppur

NIRANJAN MARDI,
Additional Chief Secretary to Government.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

Disputes between workmen and Managements referred to Labour Courts for Adjudication.

பாக்ஸ்கான் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சுங்குவார்சத்திரம்.

[அரசாணை (டி) எண் 160, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 18 மார்ச் 2019, பங்குனி 4, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]

No.II(2)/LE/320/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தில் இயங்கி வரும் பாக்ஸ்கான் டெக்னாலஜிஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும் ஒன்றுபட்ட தொழிலாளர் கூட்டமைப்பு, சென்னை என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/1947) 10(1)(c) பிரிவிலும், 10(1)(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், 1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் 10(2A) பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினா

கோரிக்கை எண்.1

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்களை IDLE-ஆக வைத்து நிர்வாகம் பணியேதும் வழங்காமல் பழிவாங்கி வருவதை தவிர்த்து அவர்கள் முன்பு செய்து வந்த பணியினையே வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

எண்	*பெயர் மற்றும் தொழிலாளர் எண்.*	*துறை*
(1)	*(2)*	*(3)*
1.	திரு. P. தினேஷ்பாபு FT-70	Stamping Production
2.	திரு. J.S. ஜபஸ்டின் ராஜா சிங் FT-73	Stamping Production
3.	திரு. S. கருப்பையா FT-82	Stamping Production
4.	திரு. R. பாலாஜி FT-112	Stamping Production

எண்	*பெயர் மற்றும் தொழிலாளர் எண்.*	*துறை*
(1)	*(2)*	*(3)*
5.	திரு. K. ராமமூர்த்தி FT-131	Stamping Production
6.	திரு. R. அசோக்குமார் FT-135	Stamping Production
7.	திரு. V. குமரேசன்– FT-165	Stamping Production
8.	திரு. A. முகமது அலி – FT-46	Stamping Production
9.	திரு. M. மணிகண்டன் – FT-45	Stamping Production
10.	திரு. M. அரவிந்தன் – FT-76	Stamping Production
11.	திரு. M. சாரதி – FT-146	Stamping Production
12.	திரு. S. மணி – FT-130	Stamping Production
13.	திரு. J. சிவகுமார் – FT-39	Stamping Production
14.	திரு. P. பாஸ்கரன் – FT-133	Stamping Production
15.	திரு. J. வீரமுத்து – FT-98	Stamping Production
16.	திரு. A. அர்ஜுன் – FT-78	Stamping Production

அல்கிமார்ஸ் I.C.M.S.M பிரைவேட் லிமிடெட், ஆலத்தூர்

[அரசாணை (டி) எண் 185, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 29 மார்ச் 2019, பங்குனி 15, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]

No.II(2)/LE/321/2019.—இந்த ஆணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக, காஞ்சிபுரம் மாவட்டம், ஆலத்தூர் சிட்கோ பார்மாசூட்டிகல்ஸ் காம்ப்ளக்ஸில் இயங்கி வரும் அல்கிமார்ஸ் I.C.M.S.M பிரைவேட் லிமிடெட், என்ற நிர்வாகத்திற்கும், செங்கை அண்ணா மாவட்ட ஜனநாயக தொழிலாளர் சங்கம் என்ற தொழிற்சங்கத்திற்குமிடையே தொழிற்தகராறு எழுந்துள்ளது என்று அரசு கருதுவதாலும்;

மேற்சொன்ன தகராறை சென்னை தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்புவது அவசியமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கருதுவதாலும்;

1947–ஆம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் (மத்திய சட்டம் XIV/**1947**) **10(1)**(c) பிரிவிலும், **10(1)**(d) பிரிவின் வரம்பு நிபந்தனையிலும் வழங்கியுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன தகராறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்காக அனுப்பப்பட வேண்டும் என்று இதனால் ஆணையிடுகிறார்.

மேலும், **1947–ஆம்** ஆண்டு தொழிற்தகராறுகள் சட்டத்தின் **10(2A)** பிரிவின்கீழ், இந்த ஆணையைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு அளிக்குமாறு, சென்னை, தொழிலாளர் நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு

எழுவினாக்கள்

கோரிக்கை எண். 1

வருடாந்திர ஊதிய உயர்வாக முதலாம் ஆண்டிற்கு ரூ.**10,000/–**ம் இரண்டாம் ஆண்டிற்கு ரூ. **12,000/–**ம் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு ரூ. **15,000/–**ம் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

கோரிக்கை எண். 4

தீபாவளி போனஸாக ஆக ஒரு மாத மொத்த சம்பளத்தை வழங்குவதுடன் கருணைத்தொகை (Exgratia) ரூபாய் பத்தாயிரம் வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயம் தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

கோரிக்கை எண். 5

தொழிலாளர்கள் அனைவரும் தொழிற்சாலைக்கு வந்து செல்ல அனைத்து பகுதிக்கும் வாகன வசதி செய்து தரவும் வாகன வசதி செய்து தரும்வரை போக்குவரத்து படியாக ரூ. **3,000/–** வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

கோரிக்கை எண். 11

வீட்டு வாடகை படியாக அனைத்து தொழிலாளர்களுக்கும் மாதம் ரூ. **5,000/–**வழங்க வேண்டும் என்று கோரும் தொழிற்சங்கத்தின் கோரிக்கை நியாயமானது தானா? ஆம் எனில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்க.

தொழிற்தகராறுகள் சட்டம், 1947 – சென்னை தொழிலாளர் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட வழக்குகளை காஞ்சிபுரம் தொழிலாளர் நீதிமன்றத்திற்கு பரிந்துரை செய்வது – திருத்தம்.

திருத்த அறிவிக்கை

[அரசாணை (டி) எண் 190, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அ2)த் துறை, 10 ஏப்ரல் 2019, பங்குனி 27, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2050.]

No.II(2)/LE/322/2019.—தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அரசாணை (டி) எண்கள் **128, 130,** நாள் **04–03–2019,** அரசாணை (டி) எண் **144,** நாள் **06–03–2019,** அரசாணை (டி) எண் **154,** நாள் **11–03–2019,** அரசாணை (டி) எண். **160,** நாள் **18–03–2019** மற்றும் அரசாணை (டி) எண். **185,** நாள் **29–03–2019** ஆகிய அரசாணைகளின் அறிவிக்கை பகுதியில், இடம் பெற்றுள்ள "சென்னை, தொழிலாளர் நீதிமன்றம்" எனும் சொற்களுக்குப் பதிலாக "காஞ்சிபுரம், தொழிலாளர் நீதிமன்றம்" என திருத்தி படிக்கவும்.

சுனீல் பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU